பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

13 12 2024 **FRIDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் கலாச்சாரத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மக்களவையில் அரசியல் சாசனம் தொடர்பான சிறப்பு விவாதம் இன்று தொடங்கியது.

3. தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் முழுமையாக சென்றடையவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. ஒடிசா மாஸ்ட்ர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rithvik Sanjeevi** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>><<<<<**

நாட்டின் கலாச்சாரத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் மகாகும்பமேளா நடைபெறவுள்ளதை ஒட்டி, பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

ஒற்றுமைக்கான சக்தியாக மகாகும்பமேளா திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இது சாதி வேறுபாடுகளை களைந்து அனைவரையும் ஒருங்கிணைப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசு, நாட்டின் கலாச்சாரத்திற்கு மதிப்பளிக்காமல் செயல்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தற்போதுள்ள மத்திய அரசு மற்றும் உத்தரபிரதேச அரசு, கும்பமேளாவிற்காக விரிவான ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

மக்களவையில் அரசியல் சாசனம் தொடர்பான சிறப்பு விவாதம் இன்று தொடங்கியது.

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் விவாதத்தை தொடங்கி வைத்து பேசினார்.

சமூக-பொருளாதார-அரசியல் மற்றும் கலாச்சாரத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக நமது அரசியல் சாசனம் திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

75 ஆண்டுகால அரசியல் சாசன வரலாற்றை எடுத்துரைத்த அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு அதன் மாண்புகளை முழுமையாக பின்பற்றுவதாக தெரிவித்தார்.

சில கட்சிகள் அரசியல் சாசனத்திற்கு சொந்தம் கொண்டாடுவதாக அவர் குறை கூறினார்.

அரசியல் சாகனத்தை எந்தவொரு கட்சியும் சொந்தம் கொண்டாட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திருமதி. பிரியங்கா காந்தி, பொதுமக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான கவசமாக அரசியல் சாசனம் திகழ்வதாக கூறினார்.

இடஒதுக்கீடு முறையை வலுவிழக்கச் செய்ய மத்திய அரசு முயற்சிப்பதாக திருமதி. பிரியங்கா காந்தி குறை கூறினார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக இதுவரை இல்லாத அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச தரத்திற்கு இணையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மட்டும், நடப்பாண்டில் 2 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு கடந்த 10 ஆண்டுகளில் 60 சதவீதம் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நடப்பு நிதியாண்டில் ரயில்வே துறைக்கான நிதி ஒதுக்கீடு 2 லட்சத்து 62 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சியர்களோடு காணொலி வாயிலாக இன்று ஆலோசனை மேற்கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - ஸ்டாலின் 30 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் முழுமையாக சென்றடையவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள வேளாண் விளை பயிர்கள் குறித்து கணக்கெடுத்து, விவசாயிகளுக்கு உரிய நிவாரண உதவிகளை மாநில அரசு வழங்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரண உதவிகள் சென்றடைவதை திமுக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

**>>>>><<<<<**

கார்த்திகை தீபத் தீருவிழாவை முன்னிட்டு, திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் சற்றுமுன் மகாதீபம் ஏற்றப்பட்டது.

இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரவிச்சந்திரன் 55 செகண்டஸ்)

**>>>>><<<<<**

அதிக விலை கொண்ட ஆவின் க்ரீன் மேஜிக் ப்ளஸ் பாலை அறிமுகம் செய்யும் திட்டத்தை திமுக அரசு கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு லிட்டர் 44 ரூபாய் என்ற விலையில் தற்போது விற்பனை செய்யப்படும் க்ரீன் மேஜிக் பால் விநியோகத்தை நிறுத்தக்கூடாது என்றும் கோரியுள்ளார்.

புதிய பாலின் விலை லிட்டருக்கு 11 ரூபாய் அதிகமாக உள்ளது என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

அந்தமான் கடல்பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு.பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது தமிழக கடற்கரையை நோக்கி நகர வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (1) 45 செகண்ட்ஸ்)

நெல்லை மாவட்டத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு. பாலச்சந்திரன் கூறினார்.

(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (2) 42 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள 400 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. இளம்பகவத் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தேனி மாவட்டம், சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

>>>>><<<<<

விழுப்புரம் மாவட்டம், வீடூர் அணையிலிருந்து 11 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், கரையோர பகுதிகளில் வசிக்கும் 16 கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

நெல்லை மாவட்டம், முக்கூடல் தாமிரபரணி ஆற்றில் சிக்கிய 3 பேரை தீயணைப்புத் துறையினர் பாதுகாப்பாக மீட்டனர்.

**>>>>><<<<<**

விளையாட்டுச் செய்திகள்

ஒடிசா மாஸ்ட்ர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rithvik Sanjeevi** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 4-21, 21-19, 21-13 என்ற செட்கணக்கில் சீனாவின் **Hu Zhe An-**ஐ வென்றார்.

**Shriyanshi Valishetty**,, **Tanvi Sharma, Tharun Mannepalli** ஆகியோரும் ஒற்றையர் பிரிவுகளில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் ரோஹன் கபூர் - **Ruthvika Shivani** இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<**

உலக செஸ் சாம்பியன் போட்டியில் பட்டம் வென்ற குகேஷ்-க்கு, ஐந்து கோடி ரூபாய் பரிசுத் தொகையை மாநில அரசு அறிவித்துள்ளது.

**>>>>><<<<<**

கத்தார் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**>>>>>END<<<<<**